Pranav Journals ISSN:2582-9599 Tamil

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# மித்ராவின் கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் கி.பே.மோகனாம்பிகா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-12**
**ranimohanaphd@gmail.com**

63

**Abstract**

Human scientific inventions amaze us. Science was born when man first rubbed stones to make fire, and as man's needs grew and his inventions grew, the world shrunk. Every day new scientific discoveries are emerging and are having great impact and effects on human life. Scientific discoveries are like a double-edged sword of good and bad.

**முன்னுரை**

இருபத்தி ஓராம்ஆம் நூற்றாண்டு அறிவியல் யுகமாக திகழ்கின்றது அணு முதல் அண்டம் வரை ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி நம்மை வியக்க வைக்கிறது அறிவியலின் துணையின்றி அறை அங்குல வாழ்வினை கூட இன்று நம்மால் நகர்த்த முடியாத சூழல் நிலவுகின்றது இப்போக்குக்கு ஈடுகொடுப்பவர்களே இன்றைய வாழ்வில் பீரி நடை போட முடியும் என்பதை யாராலும் மறுக்க முடியாது எனவே அறிவியல் அறிவையும் உணர்வையும் முனைந்து வளர்க்க வேண்டியது, இன்றைய சூழலில் ஒரு வகையில் தேவையான ஒன்றாகும். மொழியும் கலையும் பண்பாடும் கூட அறிவியல் சார்ந்து வளர வேண்டியது தவிர்க்க முடியாததாக உள்ளது அவ்வகையில் அறிவியல் பற்றி பாடிய கவிஞர்கள் பலர் இருப்பினும் கவிஞர் மித்ரா அவர்கள் அதில் சிறப்பிடம் பெறுகிறார் இந்நிலையில் கவிஞர் மித்ராவின் கவிதைகளில் அறிவியல் சிந்தனை மேலோங்கி உள்ளது

மனிதனின் அறிவியல் கண்டுபிடிப்புகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. நெருப்பை உருவாக்க கற்களை முதன்முதலில் மனிதன் உரசி பார்த்தபோது அறிவியல் பிறந்துவிட்டது எனலாம் மனிதனின் தேவைகள் பெருகப் பெருக அவனது கண்டுபிடிப்புகளால் உலகம் மிகவும் சுருங்கி விட்டது. நாள்தோறும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றி மனித வாழ்வில் பெரும் தாக்கத்தையும் விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன அறிவியல் கண்டுபிடிப்புகள் நன்மை தீமை என இரு பக்கமும் பூர்த்தீட்டப்பட்ட கத்தி போல உள்ளது இதனை பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

**அறிவியல் தமிழ்**

தமிழ் மொழி தொன்மைத் தன்மையினை கொண்டு தொண்ணெடுங்காலம் தனக்கே உரிய தனி சுயத்தினை வெளிப்படுத்திக் கொண்டு விளங்குகிறது இதனை

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
வாளோடு முன் தோன்றிய மூத்த குடி ( புறப்பொருள் வெண்பாமாலை)

என்ற வரிகளில் வலி புறப்பொருள் வெண்பாமாலை தமிழ் மொழியின் தொன்மையினை புலப்படுத்துகிறது. பழந்தமிழர்கள் இயல் இசை நாடகம் என்னும் மூன்று பிரிவுகளை உடைய

தமிழ் மொழியினை முத்தமிழ் எனப் போற்றினர் தமிழ் மொழி செம்மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட காரணம் அதன் தொன்மை இனிமை மட்டுமின்றி காலத்திற்கு கேட்ப வளரும் தன்மை என்பதும் ஆகும் காலத்தின் சூழலுக்கு ஏற்ப தமிழ் மொழி நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் என தன்னை மாற்றம் செய்து கொண்டுள்ளது. இன்றைய கணினி யுகத்தில் கணினி மொழியாகும் தமிழ் பயன்படுத்த தொடங்கியுள்ளது.

தமிழில் உள்ள அறிவியல் கருத்துக்களை வெளிக்கொணறுதல் அறிவியல் தமிழில் ஒருவகை செயல் என்றாலும் அறிவியல் தொழில்நுட்பங்களை தமிழில் படைத்தலை அறிவியல் தமிழாக வழங்கப்படுகிறது அறிவியல் தமிழில் மொழிக்கு இரண்டாம் இடமும் அறிவியலுக்கு முதன்மை இடமும் வழங்கப்படுகிறது உலக அளவில் தமிழ் மொழியினை நிலை நிறுத்தும் சாதனமாக அறிவியல் தமிழ் துறை விளங்குகிறது.

**இலக்கியத்தை அறிவியலோடு நோக்கும் போக்கும**

அறிவியல் துறை என்பது தமிழுக்கு புதிய துறை அன்று தமிழர் வரலாற்றை பார்க்கிறபோது தமிழர் சிந்தனையில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே மண்ணியல் தாவரவியல் மின்னியல் மருந்து அளவியல் எண்கள் கட்டடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை என பல் துறைகளில் அறிவியல் வேரூன்றி தொடர்ந்திருக்கிறது என்பதனை உணர முடிகிறது.இருபதாம் நூற்றாண்டு அறிவியல் யுகமாக திகழ்ந்தாலும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும் கணக்கில் அடங்காது அறிவியல் வளர்ச்சி பெற்று விளங்கும் கருத்துகளான வித்துகள் புராண இதிகாச காலங்களில் விதைக்கப்பட்டு சங்க காலம் சங்கம் மருவிய காலம் போன்ற காலம் காலமாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இன்றைய சூழலில் இலக்கியங்களில் மரபுக் கவிதையிலிருந்து வேறுபட்டு புதிய செய்திகளை சமுதாயத்திற்கு தேவையான செய்திகளை கூறுவதில் பெரும் பங்கு வகிப்பது புதுக்கவிதைகள். அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப புதுக்கவிதைகளில் பல அறிவியல் தொடர்பான செய்திகள் இடம் பெறுகின்றன.

**கவிஞர் மித்ராவின் அறிவியல் ஈடுபாடு**

புதுக்கவிஞர்கள் தங்களுக்கு என ஒரு மரபு ஏற்படுத்திக் கொண்டு குறிப்பிட்ட சில பாடுபொருட்களை பற்றி பாடிய போதிலும் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து வளர்ந்த கவிஞர் மித்ரா தமது கவிதைகளில் அறிவியல் தொடர்பான செய்திகளை இணைத்தே கவிதைகளை புனைந்துள்ளார் கவிஞர் மித்ரா அவர்கள் அறிவியல் மீது கொண்ட ஈடுபாட்டை அவரது படைப்புகளின் ஒளி உணரலாம். காலம் தோறும் அறிவியல் என்னும் உரைநடை நூல் ஒன்றினை எழுதியுள்ளார் மேலும் 2002 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகம் நடத்திய சங்க இலக்கிய தேசிய கருத்தரங்கில் புறநானூற்றில் அறிவியல் என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார் இது போன்ற செயல்பாடுகள் கவிஞர் மித்ரா அவர்களின் அறிவியல் ஆர்வத்தை புலப்படுத்துவதாக அமைகிறது அறிவியலின் துணை கொண்டு சமூகம் மேன்மையிடம் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும் அறிவியலை அறிவின்ற சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற சமூக அக்கறையினையும் தமது கவிதைகளில் பதிவு செய்துள்ளார்

மானுடவர்க்கம் அறிவியலில் மாண்புற வேண்டும்
அழிவுகள் இல்லா அறிவியல் உலகம்
அகிலத்தில் மலர ஆவண செய்வோம்
எத்தனை ஆண்டுகள் பித்தராய் மண்ணில்
அறியாமை இருளில் ஆண்டு கிடந்தோம்
அறிவியல் தீபத்தால் அகற்றிட மறந்தோம் (மித்ரா - காற்றின் சிறகுகள் ப – 110)
0.128
பாலை நிலங்களில் பசுமை புரட்சி
விலை நிலங்களில் அமோக விளைச்சல்
வியர்வைத் துளிகளில் வியக்கும் தொழில்கள்
கணிப்பொறியோடு அணுவின் ஆற்றலைத்
தேர்ந்திட இந்திய இளைஞனே உன்னால் முடியும்
(மித்ரா காற்றின் சிறகுகள் ப – 71)
72

என்ற பாடல் அடிகளின் வலி அறிய முடிகிறது இதன் வழி கவிஞர் மித்ராவின் அறிவியல் புலமையினையும் அறிவியலால் ஏற்பட வேண்டிய ஆக்கப்பூர்வமான நன்மை பயக்கும் நல்வாழ்விற்கான எண்ணங்களையும் அறிவியல் மீது கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டினையும் உணர முடிகிறது.

**இயற்கை வளங்கள்**

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு. முன்னால் பூமியில் அடர்ந்த காடுகளும் ஈரப்பதம் மிகுந்த சதுப்பு நிலங்களும் காணப்பட்டன இயற்கையால் அழிந்து விட்ட தாவரங்கள் மக்கி மடிந்து புதியதொரு சக்தியாக மண்ணுக்கடியில் புதைந்து பூமியின் வெப்பம் மற்றும் காலநிலை மாற்றத்தால் நிலக்கரி எண்ணெய் டீசல் பெட்ரோல் மண்ணெண்ணெய் போன்ற இயற்கை வளங்களைப் பெற்று பயன்படுத்தத் தொடங்கினான்.

பூமிக்கடியில் இருந்து கிடைக்கும் தீமை எரிபொருள் எண்ணெய் வளமாகவும் உள்ளது. தாவரங்கள் மண்ணில் புதைத்து வேதியியல் மாற்றத்தால் நிலக்கரி மற்றும் எண்ணெய் வளமாக மாற்றமடையும் அறிவியல் சூழலையும் கவிஞர் மித்ரா சுட்டிக்காட்டியுள்ளார்.

மண்ணுக்குள் மரங்கள் மர்மமாய் மறந்துவிடும்
பல நூறு ஆண்டுகள் பூவுலகின் அடியில்
மோன மாற்றம் முழு வீச்சில் அரங்கேறும்
மோன மாற்றத்தின் அர்த்தமே நிலக்கரி
பல்லாயிரம் ஆண்டுகளாய் பார் மக்களின் மேனியில்

பாசமுடன் வாழ்ந்திட்ட வனப்பான நெடு மரங்கள்
செழிப்பான செடி கொடிகள் சிலிர்க்கும் புல் வகைகள்
சதுப்பு நிலத்தில் சதிராடும் இலைகள் தழைகள்
சலிப்பின்றி வாழ்ந்திட்ட உயிரினங்கள் மடிந்திடவே
கல்லும் மண்ணும் கனமாக மூடிவிட
பல்லாயிரம் ஆண்டுகளின் மண்ணின் மௌனத்திற்கு
இயற்கை தந்த பரிசு எண்ணெய் வளம்

**வேளாண்மை**

மனித குல வரலாற்றில் மாபெரும் மாற்றத்திற்கு காரணமாக அமைந்தது வேளாண்மை தொழில் நாட்டின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தொழில்களில் முதன்மையானது வேளாண்மை தொழிலாகும் மற்ற எல்லா தொழில்களுக்கும் அடிப்படையாக அமைவது வேளாண்மை தொழில் இதனை

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் - 1031

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்

பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள் - 1033

என்னும் குறள்களின் வழி வள்ளுவர் குறிப்பிடுகின்றார்

வேளாண்மை என்ற சொல் பயிர் செய்தல் கால்நடைகள் வளர்த்தல் பால்பண்ணை மரம் வளர்த்தல் கோழி வளர்த்தல் ஆடு வளர்த்தல் மனித சமுதாயத்திற்கு பயன்படும் ஒவ்வொரு பயிர்களையும் மற்றும் உயிர்களையும் வளர்த்தல் என பொருள்படும். அறிவியல் பெரும் சொல்லாக விளங்குகிறது

கவிஞர் மித்ரா தமது கவிதைகளில் வேளாண் தொழில்நுட்பங்களான பசுமைப் புரட்சி மறு தாம்பப் பயிரிடுதல் கலப்புப் பயிரிடுதல் டிராக்டர் சொட்டு நீர் பாசனம் போன்றவைகள் பற்றிய குறிப்புகளையும் பதிவு செய்துள்ளார்

தொடரும் பசுமைப் புரட்சி
பெருகும் விளைச்சல்
மரிக்கும் மண்வளம்
கிழங்குகளில் தவிர்த்து
வசந்தத்தில் பூக்கும்
மருதாம்பு பயிர்

(மித்ரா - புல்நுனி வைரங்கள் ப – 96)

கலப்பு பயிரிடுதல் என்பது இன்றைய வேளாண்மையின் புதுமையான கண்டுபிடிப்பு அன்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கலப்பு பயிரிடுவதின் பயனை உணர்ந்த பண்டைய தமிழர்கள் ஐவன வெண்ணிலோடு இஞ்சி மஞ்சள் மிளகு போன்ற பல பயிர்களை கலந்து பயிரிட்டுள்ளனர் இதனை

ஐவன வெண்ணிலொடுஅரில் கொள்ப நீடி

இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும் (மதுரைக்காஞ்சி - (288 &289))

என்னும் மதுரைக்காஞ்சி பாடல் அடிகள் பழந்தமிழரின் வேளாண் தொழில்நுட்ப அறிவினை பறைசாற்றுகிறது நிலக்கடலையுடன் துவரை நீ கலப்பு பயிராக பயிரிடப்பட்ட முறையினை கவிஞர் மித்ரா அவர்கள் கவிதை வரிகள் தெளிவாக பறைசாற்றுகிறார்

நிலக்கடலை வயலில் காவலுக்கு நிற்கும் துவரஞ்செடிகள்

வேளாண்மை பயிர்களுக்கு நீர்ப்பாசனம் இயற்கையான முறையில் இருந்து மாறி செயற்கையான முறையில் நடைபெறுவதைக் கூற விளையும் கவிஞர்

தாய்ப்பால் இன்றி
குட்டி பாலில் வளரும் குழந்தை
சொட்டுநீர் பாசனம்
சொட்டுநீர் பாசனத்தில்கலந்தது
விவசாயியின் கண்ணீர்

(மித்ராவின் கவிதைகள் ப – 127)

என்ன விவசாயத்திற்காக வங்கிகளில் கடன் பெற்று பல இன்னல்களுக்கு ஆட்பட்டு பயிரை காப்பாற்ற போராடும் விவசாயின் கண்ணீர் துளிகளாகவே சொட்டு நீரினை உருவப்படுத்துகிறார்

**பருவநிலை மாற்றம்**

பூமி அளவுக்கு அதிகமாக வெப்பமடைந்து வருவதன் விளைவாக உலகை புரட்டிப் போடும் பருவநிலை மாற்றம் உருவாகிறது பருவநிலை மாற்றம் என்பது தற்காலத்திய தட்பவெட்ப நிலையில் ஏற்படும் மாற்றங்களை குறிக்கிறது பருவநிலை மாற்றம் என்பது காடுகளை அழித்தல் பசுமை இல்ல வாயுக்களை உற்பத்தி செய்தல் நிலப் பயன்பாடுகளில் மாற்றம் கொண்டு வந்தது போன்ற மனித செயல்பாடுகளேகாரணமாகின்றன

வானிலை மற்றும் அதன் விளைவுகளால் ஏற்படும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்றவற்றால் உணவு பற்றாக்குறை கடல் மட்ட உயர்வு கரையோரம் வசிப்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுதல் உயிர் வகைகள் அழிதல் போன்ற பெரும் பாதிப்புகள் ஏற்படும் என அஞ்சப்படுகிறது பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை

பருவ மாறுதல்கள்
இயற்கை சிதைப்பு
இயற்கை பேரழிவுகள்
இவற்றால்
மழை மேகங்கள்
மண் மீது கண்ணீர் சிந்தாமல்
கவனமுடன் மறுக்கும்
காற்றோடு கலகலத்து சிரித்து ஓடும்

என்ற கவிதைகளின் வழி வெளிப்படுத்தியுள்ளார் பருவநிலை மாற்றத்தால் மழைப்பொழிவு என்பது குறைந்து வறட்சி நிலவும் சூழலினை ஏற்படுத்தியுள்ளோம்

**கணினி**

கணினி ஒரு மின்னணு சாதனமாகும் கணினி என்பது எண் முதலான தரவுகளை உட்கொண்டு முறைப்படி கோர்த்து ஆவணக் கோவைகளை செயல்படுத்தும் ஒரு கருவி, முதல் கணினி 1837

ஆம் ஆண்டில் சார்லஸ் பாவேஜி என்பவர் வடிவமைத்தவர் ஆரம்பகால கணினிகள் ஒரு பெரிய அறை அளவு உருவம் கொண்டதாக இருந்தன இன்றைய அறிவியல் வளர்ச்சியின் விளைவால் மேசைக்கணினி மடிக்கணினி கையடக்க கணினி கைக்கணினி என மாற்றம் அடைந்துள்ளன கணினி இன்று மனிதர்களின் காலத்தை கடத்தும் ஒரு பொழுதுபோக்கு சாதனமாக உள்ளது

கண்டுபிடித்தவனையே
சிறை வைத்தது
கணிப்பொறி (மித்ராவின் றைக்கூ கவிதைகள் ப – 96)

மறக்கும் பசி
தட்டு நிறையக்
கம்ப்யூட்டர் அரிசி ( மித்ராவின் றைக்கூ கவிதைகள் ப – 36)

என்னும் கவிதைகளின் ஒளி இன்றைய இளைய சமூகம் கணினி எனும் மாயவளையில் சிக்கி தனது நேரத்தையும் வாழ்வையும் இழந்து விடுமோ என்ற அச்சத்தை பதிவு செய்கின்றார். கவிஞர் மித்ரா

**ரோபோ**

ரோபோ என்பது ஒரு சுய கட்டுப்பாடு கொண்டது மறு திட்ட அமைப்பு மற்றும் பல்நோக்கும் கொண்டதுமான இயந்திரம் ஆகும் கணினி வழிகாட்டுதல் மற்றும் மின்சுற்றுகளின் மூலம் இயங்கும் வியாபார மற்றும் தொழில் ரீதியில் ரோபோக்கள் பல்வேறுபட்ட தொழில்களை செலவு பிடிக்காமல் அதிக துல்லியமாகும் மனிதர்களை காட்டிலும் நம்பகமாகவும் செயல்படுகிறது

ரோபோக்கள் நிலம் அகல்தல் விண்வெளி ஆராய்ச்சி அறிவை உபகரணங்கள் ஆயுதங்கள் செய்தல் வீட்டு வேலைகள் செய்தல் துப்புரவு ராணுவம் என பல பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன கவிஞர் மித்ரா அவர்கள் ரோபோக்களின் செயல்பாட்டினை

மரித்தது மனித நேயம்
உயிர்த்தன ரோபோக்கள்

(மித்ரா - காற்றின் சிறகுகள் ப-29)

**தொகுப்புரை**

நவீன யுகத்தில் மனிதன் தன் தேவைகளை பூர்த்தி செய்ய புதுப்புது விஞ்ஞான கண்டுபிடிப்புகளை தோற்றுவிக்கும் போது அவற்றின் பயனை மட்டும் மனதில் கொண்டு செயல்படுகிறான் அவை விளைவிக்கும் தீங்குகளை பற்றி என்ன மறந்து விடுகிறான் தொழில்மயமாக்கும் முயற்சியில் எரிபொருள் அதிக அளவு பயன்படுத்தப்படுகின்றது இதனால் வான்வெளியில் கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கிறது இதன் விளைவாக ஏற்படும் புவி வெப்பமாதல் ஓசோன் மண்டல துளை பருவநிலை மாறுதல் போன்றவை ஏற்படுகின்றன.

**பார்வை நூல்கள்**

மித்ரா - புல் நுனி வைரங்கள்
மித்ராவின் றைக்கூ கவிதைகள்
மித்ரா - காற்றின் சிறகுகள்
பொ வே சோமசுந்தரனார் மதுரைக்காஞ்சி
பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள்



